


தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்கவிழா நல்லி குப்புசாமி தலைமையில் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.என்.இராஜரத்தினம் நினைவரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., திறந்து வைத்தார். இதில் இசைவேளாளர் முற்போக்கு நலச் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (03.01.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், 12 ஆம் வகுப்பு தேர்வில் 600 க்கு 600 மதிப்பெண் பெற்ற கட்டுமான தொழிலாளி சரவணக்குமார் என்பவரின் மகள் செல்வி ச.நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். உடன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன்.குமார், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் ஆர்.செந்தில்குமாரி மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்ற கட்டுமானத் தொழிலாளி மகள்

# நந்தினிக்கு சிறப்பு ஊக்கத்தொகை ரூ.3 லட்சம்!

### அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்!

*சென்னை, ஜன. 5 -*

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், திண்டுக்கல் மாவட்டத்தில், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி சரவண குமார் ஆவார். அரவது மகள் செல்வி. நந்தினி 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் பிளஸ் 2 தேர்வில் 600/600 மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செல்வி.நந்தினிக்கு புத்தக செலவு, தனிப்பயிற்சி (Special Tuition). உடை, போக்குவரத்து உள்ளிட்ட இதர வாழ்வாதார செலவினங்களுக்கு ரூ.3, 00,000/ (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) சிறப்பு ஊக்கத் தொகையாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (03.01.2024) தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்களும் செல்வி.நந்தினிக்கு சிறப்பு ஊக்கத் தொகை ரூ.3,00,000/ க்கான காசோலையினை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் திருமதி ஆர். செந்தில்குமாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### செஞ்சியில் 5.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

# அரசு மாணவியர் விடுதி கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணியை தொடங்கி வைத்தார்!

*செஞ்சி, டிச. 5 -*

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் அரசு மாணவியர் விடுதி கட்டிடம் பழுதடைந்து இருந்ததையடுத்து புதிய கட்டிடம் கட்டி தர வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்ததையடுத்து புதிய மாணவியர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார்.

ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார் வல்லம் அமுதாரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி அரசு ஆதிதிராவிடர் மாணவ விடுதி காப்பாளர் கவிதா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு தாட்கோ திட்டத்தின் கீழ் 5 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 150 மாணவிகள் தங்கி படிக்கும் வகையில் புதிய அரசு மாணவியர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

### மயிலாடுதுறை பாதிக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அரசிதழில் வெளியீடு!

# மாவட்ட மக்களுக்கு முதல்வர் தந்த மதிப்புமிக்க பொங்கல் பரிசு!

### கழக விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெகவீரபாண்டியன் நன்றி தெரிவித்து அறிக்கை!

*மயிலாடுதுறை, ஜன. 5-*

மயிலாடுதுறையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அரசிதழில் வெளியிட்ட முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.கழக விவசாய தொழிலாளர் அணி மாநில இணை செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெகவீரபாண்டியன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சோழமண்டலத்தில் மயிலாடுதுறை மாவட்டம் எத்தனையோ மகத்துவங்களை பெற்றிருக்கிறது. அரசியல், ஆன்மீகம், கல்வி, வரலாற்று முக்கியத்துவம் இப்படி எந்த கண்ணோட்டத்தில் பார்த்தாலும் மயிலாடுதுறை மாவட்டம் தமிழகத்தில் தனித்து அடையாளப்படுத்தப்படும்.

இவை எல்லாவற்றிலும் கூடுதல் சிறப்பு இதன் மாறாத பசுமை. நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடி செழிப்போடு விளங்க செய்திடும் காவிரி, இங்கு தான் கலைஞரால் மதிப்பு கூட்டப்பட்ட பூம்புகாரில் (காவிரிபுகும்பட்டினத்தில்) மகிழ்வோடு வங்கக்கடலில் சங்கமிக்கிறது.

இது நிலைக்கப்பட வேண்டுமேயானால், இம் மாவட்டம் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்று அரசுதழில் வெளியிடப்பட வேண்டும். அதை முதல்வர் அவர்கள் உறுதிப் படுத்தும் விதமாக சென்ற கூட்டத் தொடரில் மசோதாவை நிறைவேற்றினார்.

இன்று தமிழக அரசின் அரசு இதழில் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதை தமிழக அரசின் சட்டத்துறை செயலாளர் ஜார்ஜ் அலெக்சாண்டர் அவர்கள் அதற்கான தமிழக ஆளுநர் ஒப்புதலை பெற்று அந்த நல்ல அறிவிப்பை அறிவித்துள்ளார். தமிழக விவசாயிகள் மீதும் விவசாய தொழிலாளர்கள் மீதும் அதிக அக்கறை கொண்டுள்ள இத்திராவிட மாடல் அரசின் முதல்வர், மயிலாடுதுறை மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின் வயிற்றில் பாலை வார்த்துள்ளார்.

விவசாயிகள் மட்டற்ற மகிழ்ச்சியில் உள்ளனர். தன்னுடைய விளை நிலங்கள் எதிர்காலத்தில் எந்த பாதிப்புகளுக்கும் உள்ளாகாமல் பாதுகாக்கப்படும் என்று நம்பிக்கையோடு உள்ளார்கள்.

இது மயிலாடுதுறை மாவட்ட மக்களுக்கு மதிப்புமிக்க முதல்வர் தந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசாக கருதுகின்றோம். மகிழ்வோடு வரவேற்கின்றோம். என்றென்றும் இப்பகுதி விவசாயிகள் முதல்வருக்கு நன்றியோடு இருப்பார்கள், என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில விவசாயத் தொழிலாளர்கள் அணி இணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெகவீர பாண்டியன் தெரிவித்துள்ளார்.

### மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் ஊழியர்களுக்கு

# தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பேச்சுத் தமிழ் பயிற்சி!

*சென்னை, ஜன. 5 -*

தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுப் பரப்புரை திட்டத்தின் ஒரு பகுதியாக, பேச்சுத் தமிழ் வகுப்புகளை வழங்கி வருகிறது. குறிப்பாக, ஒன்றிய அரசுப் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், பிற மாநிலத் தொழிலாளர்கள் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு புலம் பெயர்ந்தோருக்கு இந்தி வழியில் பேச்சுத் தமிழ் கற்றுத்தரப்படுகிறது. இதற்காக, இந்திவழிப் பேச்சுத் தமிழ் பாடத்திட்டம் வகுக்கப்பட்டு, அப்பாடங்கள் 14 காணொலிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது இத்திட்டம், மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தில் பணிபுரியும் வெளி மாநில ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இப்பணியாளர்கள் கணக்கெடுப்பின்போது சரியானத் தகவல்களைப் பெறவும், புதிய சூழலுக்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும், அவர்களின் அன்றாட வாழ்க்கையைச் சுமூகமாக நடத்திச் செல்லவும் தமிழ்மொழியை அவர்கள் பேசக் கற்றுக்கொள்வது இன்றியமையாததாகும்.

இதுதொடர்பாக, இந்தப் பயிற்சியின் முதல் குழுவுக்கான வகுப்பு இராஜாஜி பவனில் உள்ள தமிழ்நாடு மக்கட்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தில் நேற்று முன்தினம் (3.1.2024) நடைபெற்றது. இவ்வகுப்பினை மக்கள்தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்தின் இயக்குநர் சஜ்ஜன் சிங் ஆர் சவான், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் உதவி இயக்குநர் திருமதி இரா. மதுரா மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோர் தொடங்கி வைத்து உரையாற்றினர்.

இப்பேச்சுத் தமிழ் பயிற்சியானது இணையவழியாக நடத்தப்படும். 2 மாத கால அளவிலான இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் பங்கேற்பாளர்களுக்குத் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பேச்சுத் தமிழ் பயிற்சி தொடர்பாக மேலும் விவரங்களுக்கு *tva@tn.gov.in*, *tpktva@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.



சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.6ல் கோரிமேடு ஜல்லிக்காடு பகுதியில் பொதுமக்களிடம் குறைகளை சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் கேட்டறிந்தனர்.

### பா.ஜ.க.வினர் அநாகரிகமாக நடந்து கொண்டது கண்டனத்திற்குரியது!

# திருச்சியில் முதல்வரின் கோரிக்கைக்கு பிரதமர் பதில் தராதது ஏன்?

### தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கேள்வி!

*சென்னை, ஜன. 5-*

முதல்வர் வைத்த கோரிக்கைகள் குறித்து பேசாத பிரதமர், முதல்வர் பேசும் போது மோடி என கத்திய பா.ஜ.க.வினரின் செயலுக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

2.1.2024 அன்று திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றிய பிரதமரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு, அதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசிய பொழுது 'மோடி', 'மோடி' என பாரதிய ஜனதா கட்சியினர் கத்தியது அநாகரிகத்தின் உச்சம். இது வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தி.மு.க.வினர் உள்ளிட்டோர் அமைதி காத்த விதமும் முதலமைச்சர் அவர்கள் மேடையில் பேசிய விதமும் நாகரிகத்தின் உச்சமாகும்.

முதலமைச்சர் அவர்கள் தனது உரையின் பொழுது தமிழ்நாட்டின் அத்தியாவசிய தேவைக்கான பல்வேறு கோரிக்கைகளை வைத்து, இது அரசியல் முழக்கம் அல்ல, தமிழ்நாட்டின் அடிப்படைத் தேவை, மக்களின் கோரிக்கை என்று குறிப்பிட்டது மிகுந்த பாராட்டுதலுக்குரியதாகும். ஆனால் முதலமைச்சர் வைத்த கோரிக்கைகள் எதையும் பிரதமர் மோடி கவனத்தில் கொள்ளாமல், அதற்கான பதில் கூறாமல், தமிழ் மொழிக்காக நான் பேசி வருகிறேன், ஒன்றிய அமைச்சர்கள் 400க்கும் மேற்பட்ட முறை தமிழ்நாட்டுக்கு வந்துள்ளார்கள், தமிழ்நாட்டுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றெல்லாம் பேசுவது தமிழ்நாட்டு மக்களை அப்பட்டமாக அவமதிக்கும் புறக்கணிக்கும் செயலாகும்.

சென்ற இடமெல்லாம் தமிழைப் பற்றி பேசுவதாக மோடி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த பண்டைய மன்னர்களை பற்றியும், விஞ்ஞானி சாமிநாதன் போன்றவர்களை பற்றியும் புகழ்ந்து பேசுவதன் மூலம் தமிழ்நாட்டில் பிரதமர் என்ன செய்ய நினைக்கிறார்?. மொழியின் பெருமையைப் பற்றி பேசிவிட்டால் மொழி வளர்ந்துவிடுமா? சமஸ்கிருதத்திற்கும், இந்திக்கும் பிரதமர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி, அந்த மொழியின் வளர்ச்சிக்கு எடுத்துவரும் நடவடிக்கை, ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு சட்டத்திற்கும் வாயில் நுழையாத இந்தி பெயர்களை சூட்டி அதை எல்லோரும் உச்சரிக்கை செய்யும் விதம் இப்படி வடமொழிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் பிரதமர் மோடி; தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்த நிதி எவ்வளவு? எத்தனை நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி இருக்கைகள் ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது?. அதற்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டு ள்ளது?. இவற்றையெல்லாம் மக்கள் அறிய மாட்டார்கள் அல்லது கேட்க மாட்டார்கள் என்கிற நினைப்போடு தொடர்ந்து பிரதமர் மோடி அவர்கள் வாயில் வடை சுடுகிற பணியை மட்டுமே செய்து வருகிறார்.

அண்மையில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளத்தால் தமிழ்நாட்டின் வடபகுதியும், தென்பகுதியும் நிலை குலைந்தது. தமிழ்நாடு அரசும் முதலமைச்சரும் எடுத்த நடவடிக்கையால் வெள்ளத்தில் இருந்து மக்கள் மீண்டாலும் வாழ்க்கையில் இருந்து இன்னும் மீளவில்லை. அதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. எனவே இந்த கோரிக்கையை தமிழ்நாட்டு முதலமைச்சர் பிரதமரிடம் வைக்கிறார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட இந்த நிகழ்வை பேரிடராக அறிவித்து, சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமர் மோடி காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படும் பேரிடர் தொடர் நிதியை மட்டுமே தமிழ்நாட்டுக்கு கொடுத்துவிட்டு நூறாண்டு காலத்தில் ஏற்படாத இந்த பேரிடரை பேரிடராக அறிவிக்க தயங்கி அதற்காக சிறப்பு நிதியாக சல்லி காசை கூட ஒதுக்காத பிரதமர் மோடி, தமிழ் மொழியும், தமிழ்நாட்டு மக்களையும் நேசிப்பதாக கூறுவதும்; தமிழில் சில வார்த்தைகளைப் பேசுவதும், தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றும் அரசியல் சித்து விளையாட்டாகும்.



தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்ல என்பதை இந்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அறிவிப்பார்கள். மதுரையை பன்னாட்டு விமான நிலையமாக அறிவித்திட வேண்டும். இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். பொருளாதாரம் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் பினாங்கு மற்றும் டோக்கியோவிற்கு நேரடி விமான சேவையை தொடங்கிட வேண்டும் போன்ற அடிப்படையான தேவைகளை கோரிக்கைகளாக வைத்து பேசிய பொழுது அதற்கு ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனம் காத்தது தமிழ்நாட்டுக்கு செய்யும் மிகப்பெரிய துரோக மாகும். திருக்குறளையும், திருவள்ளுவரையும் பற்றி பேசும் பிரதமர் மோடி அந்தத் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க ஏன் தயக்கம்?

தமிழ்நாடு அரசு ஜி.எஸ்.டி. வரியாக லட்சக்கணக்கில் அள்ளிக் கொடுத்தும் அதில் கிள்ளி கொடுக்க கூட ஒன்றிய அரசுக்கு மனமில்லை. ஆனால் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தை போன்ற வடமாநிலங்களுக்கு வாரி கொடுக்கிறது, ஒன்றிய அரசு. இவற்றையெல்லாம் நடுநிலையாக உள்ள தமிழ்நாட்டு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பாரபட்சமின்றி அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக செயல்படக் கூடிய ஓர் அரசு, அரசின் நிறுவனங்களான சி.பி.ஐ., ஐ.டி, ED போன்ற நிறுவனங்களை அரசியலுக்காக பயன்படுத்தாத ஓர் அரசு, அனைத்து இன, மத, மொழி மக்களையும் சமமாக கருதக்கூடிய ஓர் அரசு, சமூக நீதியை நிலைநாட்டக் கூடிய மதசார்பற்ற ஓர் அரசு ஒன்றியத்தில் அமைவதுதான் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு உகந்ததாக அமையும். அதற்கான உறுதியினை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்கான ஒரு சமிக்கை தான் தமிழ்நாட்டில் நேற்றைய பிரதமருடைய நடவடிக்கையாகும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நத்தம் அ. இராசாமணி**

**சனவரி 5 (2016)**



**திராவிடர் கழகத்தில் தனது 14வது வயதில் சேர்ந்து, அதன்பின்னர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோருடன் பழகும் வாய்ப்பைப் பெற்று நத்தம் ஒன்றியக் கழகத் துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**